பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

(திங்களிருமுறை இதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

முன் பக்கத் தலைப்பு விளம்பரம்

அன்றாடக் கட்டணம் :
(ஒரு தடவைக்கு) 15—00
நீடித்த ஒப்பந்தம் :
26 முறையும் அதற்கு மேலும்)
ஒரு தடவைக்கு : 12—00

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி

மலர் 1 | மதுரை கார்த்திகை கஉ (27-11-66) வெளியூர் கார்த்திகை கங (28-11-66) | இதழ் 159

# ஆசிரியர் ஊதியத்தை உயர்த்துக

## மாநிலங்களவையில் வேண்டுகோள்

புதுதில்லி, நவ 26—
அமைச்சர்கட்கு அளிக்கப்படும் பயணப் படியைவிட ஆசிரியர்களின் ஊதியம் குறைவாகவே உள்ளது என்றும் அமைதிப் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை அதிகமாக்க வேண்டும் என்று மாநிலங்களவையின் உறுப்பினர்கள் வேண்டிக்கொண்டனர்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர்களின் பயணப்படி, பற்றி எதிர்க்கட்சியினர் மிகத் தீவிரமாகப் பேசினர்கள். கடுமையானதோர் சொற்போர் நடைபெற்றது, திரு. இராசு நாராயணை பேசுகை அமைச்சர்கள் பெறுகின்ற எல்லா வகையான ஊதியங்களையும் கூட்டிக் கணக்கெடுத்தால், நாள் ஒன்றுக்கு உருபா 2000 ஆகிறது. அதேபோது இந்நாட்டின் ஆரவாரமில்லாத அமைதிப்பணியாற்றும் அப்பாவி ஆசிரியர்களுக்கு மட்டும் நாளொன்றுக்கு உருநான்குதான் ஊதியமாகிறது. இத்தகைய பாகுபாட்டுநிலை நிலவுவதற்குக் காரணமென்ன என்று கனல் கக்கும் நோக்கோடு பேசினர். இத்தகைய வேறுபாடுகள் நீக்கப்பட இந்த அரசு முயன்றுள்ளதாவென்றும் வினவினர்.

இந்தக் கேள்விகட்கு விடையளிக்கையில் கூட்டரசின் அமைச்சர் சவான் அவர்கள் ஆசிரியருக்கும் அமைச்சருக்கு மிடையேயுள்ள ஊதியவிகிதம் மிகப் பெரிய அளவுள்ளது. உண்மை என்றாலும், உறுப்பினர் இராசு நாராயணனின் கணக்கு அப்பட்டமான தப்புக் கணக்குதான் என்றார்.

லோகநாதமிசுராவும் பிற எதிர்க்கட்சியினரும் அமைச்சர்கள் ஊதியங்கள், பிற சலுகைகளின் வழியாகப் பெற்றுக்கொண்ட தொகைக்கான பட்டியல் கணக்குத் தர வேண்டிக் கேள்விகொடுக்கப்பட்டு ஒரு திங்களாகியும் இதுவரையும் பட்டியல் தராதநிலை குறித்து கண்டனம் அறிவித்தார்கள். பாட்னா, பம்பாய், கல்கத்தா, போன்ற நகரங்களுக்கு கூட்டரசின் அமைச்சர்கள் தங்கள் தங்கள் தொகுதியைச் சுற்றிப் பார்க்கப் போவதற்காகும் செலவுகள் கூட அரசாங்கப் பணத்தில் பயணப்படி என்ற முத்திரைக்குள் கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆகவேதான் பட்டியலை அவைக்குக் கொண்டுவர அஞ்சுகிறார்களென்று ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் தாக்கிப் பேசிய போது விடையளிக்க எழுந்த அமைச்சர் சுக்லா அவர்கள் இப்பட்டியலைத் தீட்டிடஎல்லா துறைகளையும் அமைச்சகங்களையும் கேட்டுத்தான் உருவாக்க வேண்டியுளதாயும் ஆகவே பட்டியல் அவைக்கு கொரண நீண்ட நாளாகலாமென்று கூறிய அவர் எப்படியும் இம்முறை அவை தள்ளி வைக்கப்படுவதற்கு முன்பே இப்பட்டியல் உருவாக்கிக் காட்டிட தாம் பெரிதும் முயலுவதாக உறுதி கூறினர். இருப்பினும் [illegible] கள் அவரது பேச்சால் அமைதி அடையவில்லை. பலர் எழுந்து கேள்விகள் தொடுக்க முனைந்தனர்.

## மோசசும் இந்திராவும்

புதுதில்லி. நவ. 26
சென்னை மாநகரவைத் தலைவர் திரு மைனர் மோசசு அவர்கள் தி. மு. கழகப் பாராளுமன்றக் குழுத் தலைவர் திரு. கி. மனோகரன் அவர்களுடன் சென்றுபுதுதில்லியில் இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். திரு. மோசசு அவர்கள் அண்மையில் சென்னை நகர் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் எண்ணற்ற தொல்லைகளுக்குள்ளான துயரத்தினைப் போக்கிட பல்வேறு முறைகளினும் முன்நின்று நல்ல பணி ஆற்றினரல்லவா? அப்போது அவர் தலைமைச்சரிடமும் நிதி உதவி கோரி கம்பிவழிச் செய்தி யனுப்பினர், தலைமையமைச்சர் அவரது வேண்டுகோளுக்கிணங்கி உருபாய் ஒருகோடி நிதியளித்தமைக்கு இன்று இங்கு நேரில சந்தித்தபோது தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார், மேலும் சென்னைக்குக் காவிரி நீரை கொண்டுவரும் பொருட்டு சிதம்பரம் அருகிலுள்ள வீராணம் ஏறியிலிருந்து குடிநீர் வடிக்கும் திட்டத்திற்கு எல்லா வகைகளிலும் தலைமையமைச்சர் நல்லாதரவு நல்கிட வேண்டுமென இருவரும் வலியுறுத்தினர்கள் எனத் தெரிகிறது.

## பி. சோ. வேட்பாளர்கள்

போபால், நவ 25
வரும் பொதுத் தேர்தலில் பி. சோ. கட்சியின் சார்பில் பாராளுமன்ற, சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் போட்டியி வேட்பாளர் பட்டியலை ஆய்ந்து முடிவெடுக்க இத்திங்கள் 26–ஆம் நாள் பி. சோ. கட்சியின் பாராளுமன்றக் குழு கூடுகிறது. இம்முறை மத்தியப் பிரதேசத்தில் சட்டமன்ற இடங்கள் 40, பாராளுமன்ற இடங்கள் 5-யும் பெற இயலுமென்று மாநிலக் கட்சியின் இணைதிப்புச் செயலாளர் திருமப் சபிதா பாச்பாயி தெரிவித்தார். தற்பொழுது 21 சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்றத்தில் கட்சியின் பெரும் தலைவர்களில் ஒருவரான திரு. எச். வி. காமத் அவர்களுமிருப்பது தெரிந்ததே.

## மாணவர் தலைவரின் கம்பிச் செய்தி

(கு. செ. து)

தஞ்சை, நவ, 26—
தஞ்சைப் புலவர் கல்லூரி மாணவர்கள் தி. மா. மு. க. கூட்டம் நடத்தியது குறித்து அறுவர் கல்லூரியினின்று நீக்கப்பட்டது நாம் அறிந்ததே! இதுகுறித்து சென்னைக்கு மாணவர்கள் சென்று திரு. அன்பழகன் அவர்களுடனும், திரு. சுயம்பிரகாசம் (புலவர் கல்லூரித் தலைவர்) அவர்களுடனும் பேசினர். பின்னர் அனைவரும் சென்று சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைச் சந்தித்தனர். அதுபோது "துணைவேந்தர்" இதனைக் கல்விக் குழுதான் (Syndicate) ஆராயும் அதில் தான் இதுகுறித்து முடிவெடுக்கப்பெறும்" என்றார்.

கல்விக்குழு முடிவு எடுப்பதற்கு முன்பாகவே, இன்று தஞ்சை மாணவர் குழுத் தலைவர் திரு. பாலு அவர்கள் "இச்சிக்கலை அமைதியாகவும் எங்களுக்கு அறம் வழங்கும் முறையில் தீருங்கள்" என்று கோரி கம்பிச்செய்தி அனுப்பியுள்ளார்.

"அமைதியாகத் தீர்க்கப் படாவிடில் நேரடி நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட வேண்டியிருக்கும்" என்று இங்கு இன்று கூறினர்.

## மேனன் தில்லியில் போட்டியிடுகிறார்

புதுதில்லி நவ. 16—
காங்கிரசுத் தேர்தல் குழுவினர் பம்பாய்-வடகிழக்குத் தொகுதியில் எச். சி. பார்வே போட்டியிடுவதை வரவேற்பதாக தெரிகிறது. இத்தொகுதியில்தான் வி. கே. கிருட்டிண மேனன்தான் போட்டியிட வேண்டுமென வலியுறுத்தி வருகிறார்.

அ. இ. கா. க. தலைவர் காமராசர் பம்பாய்க்கு வெளியிடங்களில் போட்டியிடுமாறு கிருட்டிண மேனனை வலியுறுத்தி வருவதாகத் தெரிகிறது. புதுதில்லி மக்களவைத் தொகுதிக்கு வி. கே. கிருட்டிணமேனன் போட்டியிடுவார் எனத் தெரிகிறது.

தேர்தல் குழு கிருட்டிண மேனன் போட்டியிடும் தொகுதியை காமராசரே முடிவெடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேனன்தான் நிற்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள பம்பாய்வடகிழக்குத்தொகுதியைத் தவிர மற்ற அனைத்துத் தொகுதிகளிலும் மக்களவைக்குப் போட்டியிடுவோரை வட்டாரக் காங்கிரசுக் குழுவே பரிந்துரைக்க வேண்டுமெனக் காங்கிரசுத் தேர்தல் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

மேனன் பம்பாய் வடகிழக்குத்தொகுதியில்போட்டியிடுவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த எசு.கே.பாடீலுடன் அ.இ.கா.க. தலைவர் இரண்டு தடவை உரையாடல் நிகழ்த்தினர். காமராசர் தனது முடிவை வரும் வியாழனன்று அறிவுப்பாரெனத் தெரிகிறது.

## காப்பீட்டுக் கழக ஊழியர் வேலை நிறுத்தம்

மதுரை நவ. 26—
அரசினர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் மின்னணு இயந்திரத்தைப் புகுத்தத் திட்டமிட்டு வருகிறார்கள். இம்மின்னணு இயந்திரப் புகுத்தலால்30,000 காப்பீட்டுக் கழக ஊழியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் இதனை எதிர்த்து அனைத்திந்தியக் காப்பீட்டுக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

இதனையொட்டி மதுரையில் உள்ள காப்பீட்டுக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தத்தில் மதுரையில் வேலை பார்க்கும் 222 ஊழியர்களில் காப்பீட்டுக் கழக ஊழியர் குழுவைச் சேர்ந்த 443 பேர் மட்டும் கலந்து கொண்டனர். மாலையில் மேலவெளிவீதியில் உள்ளக் காப்பீட்டுக் கழகத்தின் "பாரத் கட்டிடம்" முன்பு ஊழியர்கள் ஒன்றுகூடி ஆரவாரமிட்டுசென்றனர் வேலை நிறுத்தத்தையொட்டி காப்பீட்டுக் கழகக் கட்டிடங்களின் முன்பு காவல் துறையினரால் வலுத்த காவல் போடப்பட்டிருந்தது.

o

## அறிவிப்பு

ஞாயிற்றுக்கிழமையன்று அலுவலகத்திற்கு விடுமுறை விடப்பட்டுள்ளமையால் திங்களன்று இதழ் வெளிவராது என்று அறிவித்துக் கொள்கின்றோம்.

—ஆசிரியர்.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

தி. வ. ஆண்டு ககூகஉ கார்த்திகை க உ ஞாயிறு


உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் — சசஉ

# மாணவர்களின் அமைதியின்மை

மாணவர்களிடையே அமைதியின்மை மேலோங்கி நிற்கின்றது. அடிக்கடி மாணவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்றனர், ஆகவே மாணவர்களிடையே அமைதியை ஏற்படுத்த என்ன செய்யலாம் என ஆட்சியாளர் எண்ணத் தொடங்கியுள்ளனர். "மாணவர்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்துவதுதான் மாணவர்களிடையே அமைதியின்மைக்குக் காரணம்" என்று ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

மாணவர்களை அரசியல் கட்சிகள் பயன்படுத்துகின்றனவா? மாணவர்கள் அரசியல் கட்சிகளைப் பயன்படுத்துகின்றனரா? என்பது ஆயத்தக்கது. கல்லூரி மாணவர்கள் வயது வந்தவர்கள், பொறுப்புமிக்கவர்கள். உலகில் நடைபெறும் அரசியல் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்தவர்கள். கண்மூடித்தனமாக யாரையும் பின்பற்றுபவர்கள் என்றே கருத இயலாது. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் அரசியல் நாகரிகம் அற்றவர்கள். ஆகவே அவர்கள் செய்யும் கிளர்ச்சிகளை அரசியல்கட்சிகளின் தூண்டுதலால் நடைபெறுகின்றன என்று புறக்கணித்தல் தவறு. கிளர்ச்சிகளின் அடிப்படைக் காரணங்களை அறிந்து அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.

தென்னகத்தில் சென்ற ஆண்டில் இந்தித் திணிப்பை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி நடைபெற்றது. இந்தித் திணிப்பால் தமது வருங்காலம் பாழ்படுமே என்று அஞ்சி அறவழியில் அமைதியாகத் தம் எதிர்ப்பைத் தெரிவிக்க முன் வந்தனர். ஆனால் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் தம் வன்முறைச் செயல்களால் மாணவர்களின் [illegible] கிளர்ச்சியை மறவழிக் கிளர்ச்சிபோல் தோன்றச் செய்துவிட்டனர். அரசியல் கட்சி ஒன்றால் தூண்டப்பட்டது என்று ஆட்சியாளர் கூறிக்கொண்டேயுள்ளனர்.

மாணவர் உள்ளநிலையை இன்னும் விளங்கிக்கொண்டிலர். மாணவர்கள் நீறுபூத்த நெருப்பாய் உள்ளனர்.

மாணவர்களிடையே அமைதி ஏற்பட வேண்டுமானால், கிளர்ச்சிகள் தொடங்கப்பெறாமல் இருக்க வேண்டுமானால், மாணவர்களின் கருத்துக்களை அறிந்து அவர்கள் கூறும் முறையீட்டுக்குச் செவிசாய்த்து ஆட்சியாளர் செயல் புரியவேண்டும். இன்றேல் மாணவர்களிடையே அமைதி நிலையைத்தோற்றுவித்தல் அரிதாகும்.

இன்று ஆளும்கட்சியைச் சார்ந்தோர் பதவி விருப்பத்தைத் தூண்டியும், பணத்தைக் கொடுத்தும் தங்களுக்குக்கையாட்களாக சில மாணவர்களை உருவாக்கி வைத்துள்ளனர். வறுமையும், வேலையின்மையும் மிகுந்த நாட்டில் கைக்கூலிகளைப்பெறுவது அரிதன்று.

இன்று கல்லூரிகளில் மாணவர்களிடையே போர் மனப்பான்மை வளர்ந்து வருகின்றது. ஆட்சிச் சார்புடையார்களுக்கும் (இவர்கள் சிறுபான்மையினர்) மற்றவர்கட்கும் இடையே பூசல்கள் நிகழ்கின்றன;' உடனடியாக இவ்வவல நிலையைப் போக்கவேண்டும். மாணவர்களின் உள்ளக்கருத்தை அறிந்து அவர் கூறும் குறைகளைப் போக்கி அவர்கட்கு ஊக்கநிறைவு அளிக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை மாணவர்கள் அமைதியானவர்கள் என்பதில் ஐயமின்று. ஆனால் இந்திமொழித் திணிப்பை இன்னும் நீக்காமல் இருப்பது அவர்கள் உள்ளங்களில் எரிமலைபோல் குமுறிக் கொண்டுளது. என்று வெடிக்குமோ அறியோம். அதற்கு முன்பு இந்தி முதன்மையை அகற்றி மாணவர்களிடையே அமைதியை நிலைநாட்ட ஆவன செய்வது ஆட்சியாளரின் கடனாகும்.

## புதுமுறைத் தேர்தல் விளக்கம்

ஆமதாபாத், நவ 25

வருகிற பொதுத்தேர்தலில் ஒரே மேடையில் இரண்டு வேட்பாளர்கள் தேர்தல் விளக்கமளிக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தப் புதுமுறைத் தேர்தல் விளக்கம் திரு. ஆச்சாரிய கிருபாளனிக்கும் தற்பொழுது பரோடா நகரவைத் தலைவராக இருக்கும் திரு. நானலால் சோக்சிக்குமிடையே பரோடாத் தொகுதியில் மேற்கொள்ளப்படலாம்.

திரு. சோக்சி, திரு. ஆச்சாரிய கிருபாளனியை எதிர்த்துப் போட்டியிடும் முடிவு தெரிந்தவுடன் கிருபாளனிக்கு "ஒரே மேடையில் நின்று வாக்குக் கேட்போம், வருக"வென கிருபாளனிக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கு விடையளித்த கிருபாளனி, தனிப்பட்ட முறையில் தாக்குதல் கூடாது என்று ஒப்புதல் தந்தால் ஒரே மேடையில் வாக்குக் கேட்கத் தான் தயக்கம் காட்டப் போவதில்லை என்றார். எனவே இருவரும் போட்டியிடுவதும் உறுதி — ஒரே மேடையின் நின்று வாக்குகள் கேட்கப் போவதும் உறுதி.

—★—

## மின்துறைக் கழகக் கூட்டம்

புதுதில்லி, நவ 26

இன்று காலை நடுவண் நீர்ப்போக்கு, மின்துறைக் கழகத்தின் 39 ஆவது கூட்டம் திட்டத்துறை அமைச்சர் அசோக்மேத்தா தலைமையில் நடைபெற்றது.

தமது தலைமையுரையில் அசோக்மேத்தா வளர்ச்சிப் பணிகளில், குறிப்பாக நீர்ப்போக்கு மின்துறைத் திட்டங்களில் அரசியலுக்கும், வட்டார மனப்பான்மைக்கும் இடமளிக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். தொழில்நுட்பச் சிக்கலுக்கும், ஆற்றல் பெருக்கத்திற்கும் முதன்மை இடமளித்து மின்துறைத் திட்டங்களைச் செயலாக்குமாறு தாம் மின்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அசோக்மேத்தா கூறினர்.

## அறிவிப்பு

நாளிதழ் வெளிவருவதனால் திங்களிருமுறை வெளிவரும் இதழை நாளிதழுடன் இணைத்து வார மலராக வெளியிடுகின்றோம். ஆதலின் திங்களிருமுறை இதழ் உறுப்பினர்கட்கு நாளிதழ் வாரமலர் இனி அனுப்பப்படும்.

நாளிதழ்க்கு உறுப்பினராகும்படி அன்போடு வேண்டிக் கொள்கின்றோம். நாளிதழ்க்கு உறுப்பினராகி நற்றமிழ்த் தொண்டுக்கு உதவுமாறு அன்புடன் 'வேண்டுகின்றோம்.

— ஆசிரியர்.

## இதழ்களின் தொண்டு

கையூட்டு, குற்றம், ஆட்சித் தவறுகள் இவற்றைச் சுட்டிக் காட்டுவதுதான் இதழ்களின் அறமாகும்.

இதழ்களுக்கு உரிமை உறுதியாக வேண்டும். ஆட்சிபுரியும் அரசுடன் இதழ்கள் நட்பாக இருக்க வேண்டிய கட்டாயம் யாது? நாம் எங்கே தவறு செய்கின்றோம் என்று சுட்டிக் காட்டுவதுதான் இதழ்களின் பணி.

—குடியரசுத் தலைவர்.

# பெரம்பலூர்-அரியலூர் தொகுதிகளில் கழகத்திற்கே வெற்றி வாய்ப்புக்கள்!

(கு. செ. து.)

பெரம்பலூர் நவ 25—

பெரமபலூர் பாராளுமன்றத் தொகுதியும் அதனுள் அடங்கிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகளும்கடந்தபொதுத் தேர்தலில் தி. மு. கழகம் வெற்றி வாகை சூடிய பகுதிகளாகும். வரும் பொதுத்தேர்தலிலும் கழகமேஎல்லா இடங்களிலும் வெற்றி பெறுவதற்கான நல்வாய்ப்புகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பெரம்பலூர் தனித் தொகுதியில்சே எசு. இராசு பி.ஏ., பி. இடி அவர்கள் நிச்சயம் நிறுத்தப்படுவார்கள் என்று இத்தொகுதி கழகத்தவர்கள் கருத்தறிவிக்கின்றனர். பெரம்பலூர் வட்டத்தில்கழகவளர்ச்சிக்கு நெடு நாட்களாகப்பாடுபடுபவர், சிறந்த பேச்சாளர், கழகத் தலைவர்களின் அன்பையும் அறிமுகத்தையும் பெற்றவர் என்றவகையிலும்தொகுதி மக்களுடன் நல்ல பழக்கமுள்ளவர் என்பதாலும் பட்டம் பெற்றவர் என்பதாலும் இவருக்கான வெற்றி வாய்ப்புகள் நிறைய உண்டு என்ற பேச்சு வலுவாக இத்தொகுதியில் நிலவுகிறது.

இத்தொகுதியில் காங்கிரசின் சார்பில் பெரியண்ணன் என்பவரோ அல்லது வடிவேலு என்பவரோ நிறுத்தப்படலாம் என்று காங்கிரசுக் கட்சியில் இப்பகுதிக்கு முக்கியமானவராகவிளங்கும் ஒருவர் நமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கழக சார்பில் அரியலூர் பொதுத் தொகுதிக்கு உடையார் பாளையம் வட்டச் செயலாளரும், நெடுநாளைய கழகத் தொண்டரும் போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவருமான திரு. கோ. சிறைப்பெருமாள் அவர்களோ அல்லது அவரைப்போலவே செல்வாக்கு பெற்றுள்ள திரு இராமசாமி (இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்களோ நிறுத்தப்படலாம் என்று நம்பகமாகத் தெரிகிறது.

காங்கிரசார், அரியலூர் தொகுதி வேட்பாளராக அரியலூர் ஊராட்சி மன்ற ஒன்றியப்புத்துணைத்தலைவர் இராமசாமியை நிறுத்துவர் என்று கருதப்படுகிறது.

பெரம்பலூர் பாராளுமன்றத் தொகுதிக்கு எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் கழகவேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று கருதப்படுகிறது.

பொதுவாகவே பெரம்பலூர் பாராளுமன்றசட்டமன்ற தொகுதிகளில் காங்கிரசார் தனது கட்சி வேட்பாளர்களாக எவரை நிறுத்தினாலும் கழகமே வெற்றிபெறும் என்பது இங்குள்ள நிலையாகும்.

## ஆசுதிரேலியாவில் பொதுத் தேர்தல்

ஆசுதிரேலியா நவ 25-

ஆசுதிரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் பொதுத் தேர்தல்கள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன இத்தேர்தல்களில் வியத்துநாம் சிக்கலே முதன்மை பெற்றுள்ளது.

தொழிற்கட்சியினர் தாம் ஆட்சிக்கு வந்தால் கட்டாயப் படை சேர்க்கும் முறையை ஒழிப்பதாக உறுதி கூறியுள்ளனர்.

நியூசிலாந்து எதிர்க்கட்சியினர் வியத்துநாமிலிருந்து நியூசிலாந்துப் படை வீரர்களைத் திரும்பப் பெறச் செய்வோம் என்று கூறியுள்ளமை தென்கிழக்காசிய நாடுகளின் ஒப்பந்தத்துக்கு முரணானது என்று நியூசிலாந்து தலைமை அமைச்சர் கூறியுள்ளார்.

27—11—66

குறள் நெறி


கார்த்திகை கஉ

# வார மலர்

## பார்வையற்றோர் மறுவாழ்வு இல்லம்

[ அ. பொன்னம்பலம் ]

முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் இலங்கும் மதுரைமா நகரின் பல்வகையான சிறப்பியல்புகளுக்கு அணியாக அமைந்துள்ளது அண்மையில் துவக்கப்பட்ட பார்வையற்றோர் மறுவாழ்விப்பு இல்லமாகும். கொடைவளம் கொண்ட அமெரிக்க அரசின் பொருளுதவியுடன் துவக்கப்பட்ட இந்த இல்லமானது, தென் ஆசியாவிலே முதல் இல்லம் என்ற ஈடு இணையற்ற பெருமையைக் கொண்டுளளது. "பார்வையை இழந்த பின்னர் இவர்களால் என்ன செய்ய இயலும்" என்ற மன்பதையின் வசைமொழிகளின் சூடு தாங்க இயலாது நம்பிக்கையற்ற வாழ்க்கையின் ஓரப்பகுதிக்குத் தள்ளப்பட்டு மன்பதைச் சுமைகளாக கருதப்படும் பார்வையற்றோர்களின் உள்ளங்களில் நம்பிக்கைச் சுடரை ஏற்றி வைப்பதோடு அல்லாமல், அவர்களை நல்ல குடிமக்களை ஆக்குவதில் இத்தகைய இல்லமானது ஒரு செயல்முறைப் பல்கலைக் கழகமாகப் பார்வையற்றோர்களுக்கு இயங்கி வருகிறது. நகரின் அமைதி நிறைந்த ஒருபகுதியில் எத்தகைய ஆரவாரமும் இல்லாது இலைமறைவுக் காயாக இருந்து தன்னுடைய சீரிய பணியை ஆற்றிவரும் இத்தகைய இல்லத்தின் சிறப்பியல்புகளைப் பற்றி ஈண்டு காணுவோம்.




இல்லத்தின் முகப்புத் தோற்றம்

**தோற்றம் :**

இருள் கப்பிய உலகில் வாழும் உள்ளங்களை பயனுள்ள மனிதர்களாக ஆக்க வேண்டுமென்ற நல்நோக்குடன் வாலடன்கே என்ற பெரியார் 1784 ஆம் ஆண்டில் பாரிசுமாநகரில் முதன் முதலாகப் பார்வையற்றோர்களுக்கான பள்ளியைத் திறந்தார் இவரின் சீரிய பணியைப் பின்பறறி உலகில் பலபகுதிகளில் இத்தகைய பள்ளிகள் திறக்கப்பட்டன. ஆனல் இத்தகையபள்ளிகளின் நோக்கம் யாவும், பார்வையற்றோர்களுக்கு உணவு, உறையுள்



கல்விப் பயிற்சி

முதலியவற்றை அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அளிப்பதே ஒழிய அவர்கள் தங்கள் தேவையை தாங்களே தேடிக்கொள்ளும் வழிமுறைகளில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நோக்கம் கொண்டதாக இல்லை. பார்வையற்றோர்களுக்கு கோம்பேறி மடங்களைத் தோற்றுவிப்பதற்டுப் பதிலாக, அவர்கள் தங்களுடைய தேவைகளை தங்களுடைய உழைப்பின் மூலமாக ஈட்டிக்கொள்ளும் வழிமுறைகளைக் காட்டும் பயிற்சி நிலையங்களை ஏன் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணம் அமெரிக்க நாட்டைச் சார்ந்த எசு. சி. கோவ் என்பவரின் உள்ளத்தில் எழுந்தது. இவர் தம் எண்ணத்தைச் செயலாக்கி பெர்கின்சு பார்வையற்றோர் பள்ளியை ஏற்படுத்தினர். இவர் தாம் காட்டிய நல்வழியைப் பின்பற்றி அமெரிக்காவின் பலபகுதிகளில் பார்வையற்றோர்களுக்காக பல மறுவாழ்விப்பு நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இங்கு தோற்றுவிக்கப் பட்டிருக்கும் இல்லமானது, அமெரிக்காவில் இயங்கும் பார்வையற்றோர் பள்ளிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதால் இந்தியாவிலுள்ள ஏனைய பார்வையற்றோர் பள்ளிகளுக்கும் இத்தகைய இல்லத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

**பயிற்சி முறைகள் :**

இனி, இவ்வில்லத்தில் சேர்க்கப்படும்பார்வையற்வர்களுக்கு எவ்வகையான பயிற்சி முறைகள் அளிக்கின்றார்கள் என்பதைக் காணுவோம். முதன் முதலாக பார்வையற்றோர்களின் உள்ளங்களைக் கப்பியுள்ள தாழ்வுச் சிக்கலை களைந்து உள்ள உரத்தை ஊட்டுகின்றனர். இத்தகைய சாதனையில் இவ்வில்லமானது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது எனக்கூறலாம் இவ்வில்லத்தில் சேர்வதற்கு முன்னர் தங்கள் குறைபாடுகளை எண்ணி மனம் நொந்து கொண்டிருந்தவர்கள், இவ்வில்லத்தில் சேர்ந்த சிலதிங்கட்குள்ளாக, தங்கள் குறைபாடுகளைப் பற்றிய எண்ணத்தை அறவே துறந்ததோடு அல்லாமல், மற்றவர்களுடன் பேசும் பொழுது கலகலப்புடன் மட்டுமின்றி, நகைச்சுவையுடன் பேசக் கற்றுக கொள்கின்றனர். இரண்டாவதாக, இங்குள்ள பயிற்சியாளர்களுக்கு இயக்கப் பயிற்சி (Morality Traning) அளிக்கின்றனர்; அதாவது இவர்கள் எவ்வகையான சூழ்நிலையிலும் மற்றவர்களின் துணையின்றி, தாங்களாகவே தங்கள் வழியை உணர்ந்து நடந்து செல்ல பலவகையான பயிற்சி முறைகளை இவர்களுக்கு முறைப்படி அளிக்கின்றனர். ரிச்சார்டு. இ. கோவர் (Richard. E. Hoover) என்ற அமெரிக்க மருத்துவர் கண்டு பிடித்த புதிய நடைமுறைப் பயிற்சி முறையை இவர்கள் பின்பற்றுகிறார்கள். இத்தகைய பயிற்சி முறையில், முதன் முதலாக நீண்ட மூங்கிலின் துணைகொண்டு எதிரிலுள்ள தடங்களின் தன்மையை உணர்ந்து நடக்கக் கொடுக்கின்றனர். ஆனல் இங்குள்ள பயிற்சியாளர்களில் பெரும்பாலோர் மூங்கிலின் துணையின்றியே நடப்பது பாராட்டுதற்குரிய செயல் மட்டுமல்ல, வியப்பிற்குரிய செயலாகவே இருக்கின்றது.

மேலும் இவர்களுக்கு அன்றாட வேலைகளான, துணி துவைத்தல், மழித்தல், நீர் இறைத்தல் போன்றவைகளை மற்றவர்களின் துணையின்றி செய்யவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தொழில் பயிற்சிகள்:** தங்களுக்குத் தேவையான பொருளைத் தாங்களாகவே ஈட்டிக் கொள்ள வேண்டும் என்ற நல் நோக்குடன் 'ஈண்டுபயிற்சியாளர்களின் விருப்பம்.உடல் வலிவு, இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வகையான தொழில் முறைகளில் பயிற்சி அளிக்கின்றனர். தற்பொழுது பயிற்சியாளர்களிக்கு, நெய்தல், கோழி வளர்த்தல், தையல் கலை, பிளாசுடிக் கூடை முடைதல் பிரம்பு நாற்காலி பின்னுதல், பனை ஓலைகளைக் கொண்டு பல்வகையான பொருள்கள் செய்தல் முதலிய துறைகளில் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதற்கென்று பெரியதொழிற் கூடம் ஒன்றை மிகுந்த பொருட் செலவில் அண்மையில் கட்டியுள்ளார்கள். மேலும் வெகுவிரைவில் புத்தகம் கட்டுதல், பொறியல்துறை இவைகளில் பயிற்சியளிக்க தனித் துறைகள் துவக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன. ஈண்டு இவர்களால் உருவாக்கப்படும் பொருட்கள் யாவும் பார்வையற்றோர்கள் இப்படி செய்ய முடியுமா" என வியப்புறும் வண்ணம் தரத்தில் சிறந்து விளங்குகின்றன. பார்வையற்றோர்கள் எழுத்து முறையில் தொடர்பு கொள்ளவும் கற்கவும், இவர்களுக்கு இங்குபிரைல் எழுத்துமுறையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**இரு கண்கள்:**

இவ்வில்லத்தின் அருஞ்சாதனைகளைப் பற்றிக் குறிப்பிடும் வேளையில் இவ்வில்லத்தில் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கும் இரண்டு தொண்டு உள்ளங்களை பாராட்டாமல் இருக்க இயலாது. தலைசிறந்த கண் மருத்துவரான திரு. கோ. ~~வெங்கிடசாமி அவர்களை இவ்~~வில்லமானது நெறியாளராக (DIRECTOR) பெற்றிருப்பதை, இவ்வில்லம் பெற்ற மிகப்பெரிய பேறு எனக் கூறலாம். மதுரை மருத்துவக் கல்லூரியின் துணைத் தலைவர் பொறுப்புடன், அரசினர் மருத்துவமனையின் கண் மருத்துவத் துறையின் தலைமைப்பொறுப்பையும் பெற்றிருக்கும் இவர், எவ்வகையான

[4-ஆம் பக்கம் பார்க்க]

## இந்தி நலம் பேணுவதே இந்த அரசு என்பதற்கு, மேலும் ஒரு சான்று

"அரியலூர் அரசினர் கலைக் கல்லூரியில் இரண்டாம் பிரிவுக்குப் பாடமாக தமிழைப் பயிலுதல் விடுத்து இந்தியைப் பயிலும் மாணவர் ஒருவரே!

அந்த ஒரு மாணவருக்காக இந்திமொழி அறிந்த விரிவுரையாளர் இங்கு பணியாற்றுகிறார்.

ஒரு மாணவருக்காக ஒரு விரிவுரையாளரை ஒரு கல்லூரியில் அமர்த்துதல் எவ்வகையில் ஏற்புடைத் தென்பதே நமக்கு வியப்புத்தரும் செய்தி!

அந்த ஒரு மாணவரை இந்தி பயில்வார் நிறைந்த கல்லூரிக்கு அனுப்பி அங்கேயே பயிலச் செய்வதன் மூலம் ஒருவருக்காகச் செலவிடும் தொகையைச் சிக்கனப் படுத்தக்கூடாதா? மக்களின் வரிப்பணத்தை இப்படியெல்லாம் அக்கரையின்றிச் செலவிடும் அரசு தகுதியுள்ள அரசுதானு......?

சீர்தூக்கி

மதுரை : 27—11—66 ஞாயிறு

# குறள்நெறி

வெளியீடு: 28—11—66 திங்கள்

[3-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஊதியமும் வேண்டாம் என்று இவ்வில்லத்தின் நெறியாளர் பொறுப்பை ஏற்று நடத்தி வருவது இவருடைய தொண்டுள்ளத்தை காட்டுகிறது' அமெரிக்க அரசின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்று ஆங்குள்ள பார்வையற்றோர் பள்ளிகளின் நடைமுறைகளைப் பற்றி ஆறு திங்களாகப்பார்வையிட்டு வந்த இவர், தான் பெற்ற அறிவை இவ்வில்லத்தின் நடைமுறைகளில் புகுத்த பெரிதும் முயன்று வருகிறார். இங்குள்ள பயிற்சியாளர்கள் தனக்கென ஒரு இல்லம் இருக்கிறது என்பதையும் அடிக்கடி மறந்து பணியாற்றுகிறார்.

உணரவேண்டிய உண்மைகள்:

இவ்வில்லத்தினின்று பயிற்சிபெற்று செல்லும் மாணவர்களுக்கு வேலைதேடித் தருவதற்காக இவ்வில்லத்திலே வேலைத் தேடித்தரும் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி வருகின்றனர். இவர்களின் இத்தகைய சீரிய முயற்சி சிறக்க வேண்டுமெனில், தொழில், முதலவர்கள் தங்கள் தொழிற்கூடங்களில் பார்வையற்றோர்களை அவர்களின் திறமை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு தொழிலாளிகளாகச் சேர்க்க முன்வரவேண்டும்.



கூடை முடைதல்

இவரை "நடமாடும் கடவுளாக" கருதி தங்களுடைய உள்ளங்களில் ஏற்றிப் புகழ்கின்றார்கள் என்றால் இவருடைய சீரிய தொண்டிற்கு இதைவிட வேறு சான்று என்னவேண்டும்.

அடுத்து இவ்வில்லத்தின் மேற்பார்வையாளராக பணியாற்றும் திரு. செயராமன் அவர்களின் நற்பணியைப் பாராட்டாமல் எந்த நல்ல உள்ளமும் இருக்க முடியாது. 'பார்வை போனால் என்ன! மனிதனுக்கு உள்ள உரமும் உழைக்கும் திறனும் இருந்தால் போதும். எத்தகைய குறைபாட்டையும் வெல்லலாம் என்ற உண்மைக்கு உருவாக அமைந்திருக்கும் இவரை இவ்வில்லமானது மேற்பார்வையாளராகப்பெற்றிருப்பது இவ்வில்லம் பெற்ற மற்றொரு பேறாகும்.

ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டத்தை எம்.ஏ. மட்டுமின்றி, மற்ற மொழிகளிலும் பல பட்டங்களைப் பெற்றுள்ள இவர் பார்வையற்றோர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே பலவகைகளில் இருக்கின்றார். தென் மாநிலக்களில் அமெரிக்கா சென்று கல்விபயின்ற முதல் பார்வையற்றோர் என்ற பெருமையை இவர் பெற்றிருந்தாலும், பழகுவதற்கு இனியவராகக்காட்சியளிக்கின்றார். இவ்வில்லத்தின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டும் இவர்,

45 இலக்கம் பார்வையற்றோர்களைக் கொண்ட நம் நாட்டில் (அதாவது உலகிலுள்ள பார்வையற்றோர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கை பெற்றிருக்கும். இத்தகைய இல்லங்கள் மாவட்டங்கள் தோறும் தோற்றுவிக்கப் படவேண்டும். இதற்கு நடுவரசு, மாநில அரசு இவற்றின் முழு ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்மதுரை நகரவையானது. தன்னுடைய நூற்றாண்டுவிழாவின் நினைவுச்சின்னமாக ஏழைகள் விடுதியை இவ்வில்லம் முழுமையாகச் செயல்பட கொடுத்து உதவி புரிவார்களானால் திண்ணமாக இந்தியாவிலுள்ள 45 இலக்கம் பார்வையற்றோர்களும் மதுரை நகரவையின் கொடைத்திறனை நாளும் போற்றிப்புகழுவார்கள். தென் கிழக்கு ஆசியாவிலே முதல் இல்லம் என்று போற்றப்படும் பார்வையற்றோர் இல்லத்தை தன்னுடைய நகரவை எல்லைக்குள் பெற்றிருக்கும் மதுரை நகரவையானது இத்தகைய உதவியை விரைவில் செய்யாமலா போய்விடும்?

# குறள் அரங்கம்

## உங்கள் குறள் அறிவுக்கு ஓர் உரைகல்

விடைகள்—சா. வி. இராசேந்திரதாசன்

4. "திங்கள் மறைப்பு" குறளில் உண்டா?

ஆம், உண்டு.

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண்டற்று (1146).

5. வள்ளுவர் காட்டும் "உலோகப் பொருட்கள்" எவை? எவை?

1. கல்: வழியடைக்குங்கல் (38), கட்டளைக் கல் (505).
2. பொன்: பொன் போற்பொதிந்து (155) பொன்போல் ஒளிவிடும் (267).
3. இரும்பு: பொன்போலத் தேயும் (888), தூண்டிற்பொன் (931).
4. பளிங்கு: பளிங்கு போல் (706).
5. மண்: மண்மாண் (407).

6. வள்ளுவர் சினந்து சொல்லும் சொல் எது? எத்தனை தடவை கூறுகிறார்?

வள்ளுவர் சினந்து சொல்லும் சொல் "கெடுக!" என்பதாகும். ஒரே ஒரு முறை மட்டும் கூறுகிறார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான் (1062).

7 ஒரே பொருளில் இரண்டு அதிகாரம் தருகிறார். அவ்வதிகாரம் எது? எங்கெந்த இடங்களில் வருகிறது?

குறிப்பறிதல் என்னும் பொருளில் இரண்டு அதிகரம் தருகிறார்.

1. பொருட்பால் அமைச்சியலில் ஒன்றும் (அதிகாரம் 71)

2. இன்பத்துப்பால் களவியலில் மற்றொன்றும் (அதிகாரம் 110) வருகிறது.

8 "இம்மி"க்குக் கீழ் அளவுமுறை உண்டா? அதற்கு வள்ளுவர் குறள் சான்று காட்டுகிறதா?

தமிழ் நெடுங்கணக்கில் இம்மிக்குக் கீழும் அளவுமுறை உண்டு. அந்த அளவு "இட்டி" என்பதாகும். இதன் அளவு $\frac{1}{320}\times\frac{1}{320}\times\frac{1}{320}\times\frac{1}{320}$

முந்திரி = $\frac{1}{320}$

இம்மி = முந்திரி × முந்திரி = $\frac{1}{320}\times\frac{1}{320}$

இட்டி = இம்மி × இம்மி = $\frac{1}{320}\times\frac{1}{320}\times\frac{1}{320}\times\frac{1}{320}$

குறள்:

ஆகாறு அளவுஇட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை. (478)

9 வள்ளுவர் கண்ட மலர்கள் எத்தனை?

வள்ளுவர் கண்ட மலர்கள் அனிச்சம்: தாமரை, குவளை, ஆகிய மூன்று, நறுமலர் (1231), மலரனையர் (650), மலர்மிசை (3), மலரன்ன (1142), கோட்டுப்பூ (1313), பூ அன்ன (1305), முகைமொக்கு (1274) எனப் பொதுவாகப் பல இடங்களில் மலரினைக் குறிப்பிட்டாலும், அனிச்சம் (90), அனிச்சமே (111), அனிச்சப்பூ (1115), அனிச்சமும் (1120) எனவும், தாமரையினுள் (617), தாமரைக்கண்ணான் (1103) எனவும், குவளை (1114) எனவும் மூன்று மலர்களின் பெயர்களின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகிறார்.

10. செல்வத்தைப் பற்றி வள்ளுவர் எத்தனை குறட்பாக்கள் பாடியுள்ளார்?

31, 125, 178, 216, 217, 241, 332, 333, 400, 375, 411, 437. 524, 555, 565, 566. 757, 837, 937, 939, 1000, 1006, 1007, 1008, 1010, ஆகிய எண் பெற்ற 25 குறட்பாக்களில் செல்வம் என்ற சொல்லாலும் 168, 179, 215, 374, 408, 482, 568, 970, ஆகிய எண்பெற்ற 8 குறட்பாக்களில் 'திரு' என்ற சொல்லாலும் 400 ஆம் குறளில் மாடு என்ற சொல்லாலும் 408 ஆம் குறளால் வளம் என்ற சொல்லாலும் செல்வத்தைக் குறிப்பிடுகின்றார். செய்யாளிடத்தும் "பொருளின்" பின்னும் மறைத்து வைக்கப்பட்ட செல்வமும் குறட்பாவுள் ஆங்காங்கே குவிந்து கிடக்கின்றன.

11. திருக்குறளில் காட்டியுள்ள பயிர்வகைகள் எத்தனை?

ஏறத்தாழ ஏழு.

1, புல்; பசும்புல் (16). 2. எள்: எட்பகவன்ன (889).
3. தினை: தினைத்துணை (104), தினைத்துணையும் (144), தினைத்துணையாம் (533), தினைத்துணையும் (1282).
4. கரும்பு: கரும்புபோல் (1078).
5. வள்ளி. வாடியவள்ளி (1304).
6. மூங்கில்: வேய்த்தோளவட்கு (1113), காம்பேர் தோள் (1272).
7. குன்றிமணி: புறங்குன்றி, அகங்குன்றி (277).

12. அதிகமான, குறைவான எழுத்துக்களைக் கொண்ட குறள் எது?

அதிகமான எழுத்துக்களைக் கொண்ட குறள்: கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய் பொய்க்காய்வு காய்தி என்னெஞ்சு (1246).

குறைவான எழுத்துக்களைக் கொண்ட குறட்பாக்கள்:

1. அஞ்சுவ தோரு மறனே யொருவனை வஞ்சிப்ப தோரு மவா. (366).

2. காத லவரில ராகநீ நோவது பேதைமை வாழிஎன் னெஞ்சு (1242).

13. சிற்றிலக்கங்களில் எந்த எண்ணை அதிகம் எடுத்தாண்டுள்ளார்?

சிற்றிலங்களில் 'ஒன்றை'யே அதிகமாக எடுத்தாண்டுள்ளார். 'ஒரு' என 52 முறையும் 'ஒன்று' என 42 முறையும் ஓர் என 4 முறையும் எடுத்தாண்டுள்ளார்.

[அடுத்த இதழில் முடியும்]

"குறள்நெறி" நாளிதழ்க்கு

ஆண்டு உறுப்பினர் கட்டணம் உரூ. 25 அனுப்புங்கள். அன்னைத் தமிழ்த் தொண்டுக்கு உதவுங்கள்.

வெளியிடுபவர் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B.Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம், திருப்பரங்குன்றம், மதுரை5. தொலைபேசி 8-65.